Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 120 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 09, 2021
தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

## ஐநூறுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்று

இலங்கையில் மேலும் ஐநூறுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக தினசரி எண்ணுறுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதி

03



# ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மீது அரசாங்கம் பகிரங்க குற்றச்சாட்டு!

இலங்கை விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையும், அதன் ஆணையாளரும் பக்கச் சார்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இது ஐ.நாவின் கட்டமைப்பை மீறும் செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

03

## பொத்துவில் - கொலிகண்டி பேரெழுச்சியின் வெற்றி தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல



பொத்துவில் முதல் கொலிகண்டி வரையான பேரெழுச்சியின் வெற்றி, தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல எனவும், எல்லோரும் இணைந்த இனத்தின் வெற்றி என்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது

03

## 40 நாள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டது காத்தான்குடி!

40 நாட்களின் பின்னர் காத்தான்குடி நகரில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளில் இன்று வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த காத்தான்குடி நகரின் 10 கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு திறக்கப்பட்டன.

கொரோனா பரவல் அதிகரிப்பை அடுத்து காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் 18 கிராம சேவகர் பிரிவுகள்

03

## எனது உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் அரசாங்கமே பொறுப்பு!

### எச்சரிக்கும் சுமந்திரன்



தனது உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

03

## வடக்கு, கிழக்கு ஒன்றிணைந்து புதிய அரசொன்று உருவாகிவிடும் சரத் வீரசேகரவிற்கு அச்சமாம்



வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்து புதிய அரசொன்று உருவாகிவிடுமோ என்ற பீதி நாட்டுப்பற்றுள்ள மக்களின் உள்ளங்களை ஆட்டிப்படைத்துள்ளது.

அதனால்தான் ஆரம்ப காலம் முதல் அவ்வாறானவர்கள் மாகாண சபைகளை வரவேற்கவில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளேடொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

மாகாண சபைகள் தேவையில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். எனினும் நாட்டின் அரசியலமைப்பு அது

03

## நண்பன் வீட்டிற்கு சென்ற 7 வயது சிறுவன் சடலமாக மீட்பு!



வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நவ்வி பகுதியில் 7 வயது பாடசாலை மாணவன் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா நவ்வி ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வரும் 07 வயதுடைய ப. அபிசாந் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

03

## இலங்கை வரும் இம்ரான் கான் நாடாளுமன்றில் விசேட உரையாற்றுவார்



இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இலங்கை நாடாளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலை வர்கள்

03

## மொட்டு அரசிலிருந்து விமலை உடனே வெளியேற்ற வேண்டும்!

### நிமல் லான்சா வலியுறுத்து!



"தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்சவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற

03




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal
செவ்வாய்க்கிழமை, பெப்ரவரி 09, 2021

# பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு!

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ் நிலையங்களால் பி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பேரணிக்கு தடைகோரி ஏஆர் அறிக்கையூடாக பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே, குறித்த மூன்று பொலிஸ் நிலையங்களாலும் இந்த 'பி' அறிக்கைகள் பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றக் கட்டளைச் சட்டம் 55 (1), 56 2 (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த பி அறிக்கைகளை பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தனித்தனியே தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட வர்கள் உட்பட அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கு எதிராகவே இந்த அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த அறிக்கை மீதான விசாரணைகள் இன்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்றதை அடுத்து பருத்தித்துறை பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரு பொலிஸ் நிலையங்களின் வழக்குகளும் மே மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# பேரணியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக டீ அறிக்கை தாக்கல்!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் மக்கள் எழுச்சி பேரணியில் பங்கேற்றவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் புதிய டீ அறிக்கையொன்று நேற்று (திங்கட்கிழமை) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பொலிஸாரால் ஏற்கனவே தடையுத்தரவு பெறப்பட்டிருந்த AR வழக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய டீ அறிக்கையிலான வழக்குகள் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையிலான போராட்டத்தை நடாத்தியவர்களிற்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த டீ அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், துரைராசா ரவிகரன் உள்ளிட்டோரின் பெயர்கள், மதத்தலைவர்களின் பெயர்களும் சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற எல்லைக்குள் பேரணியில் பங்குபற்ற முடியாது, பேரணியை முன்னெடுக்க முடியாது என தடை கோரி பொலிஸார் தடையுத்தரவை பெற்றிருந்த நிலையில், கடந்த 05 .02.2021 அன்று பேரணி முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் நுழைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 10 ஆண்டுகளில் இல்லாத அளவு மியன்மாரில் மாபெரும் போராட்டம்!



மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கெதிராக 10 ஆண்டுகளில் இல்லாத அளவு பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாங்கூன் நகரில் நேற்று பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஊர்வலமாகச் சென்ற அவர்கள், மையப் பகுதியில் அமைந்துள்ள சுலே ஸ்தூபி அருகே ஒன்றுகூடினர்.

கலைக்கப்பட்ட அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகவும் அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். புரட்சியின் அடையாளமான மூவிரல் வணக்கம் செலுத்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக, போராட்டங்களை ஒடுக்குவதற்காக இணையதளத்தை இராணுவம் முடக்கினாலும், அது போராட்டத்தின் வளர்ச்சியை பாதிக்கவில்லை.

இராணுவ ஆட்சி திரும்பப் பெற வேண்டும், ஆங் சான் சூகி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

மியன்மாரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இராணுவம் கடந்த திங்கட்கிழமை கவிழ்த்து. ஓராண்டுக்கு அவசரநிலை அறிவித்தது. அரசாங்கத்தின் ஆலோசகர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மியின்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இராணுவ தலைமை தளபதி மின் ஆங் லயிங்க் தலைமையில் 11 இராணுவ அதிகாரிகள் அடங்கிய ஆட்சி மன்றக் குழு உருவாக்கப்பட்டது.

# கே.கே.எஸ். சீமெந்து தொழிற்சாலையில் உதவாத பொருள்களை அகற்ற ஒப்புதல்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் காணப்படும் பயன்பாட்டுக்கு உதவாத பொருள்களை அகற்றுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

காங்கேசன்முறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் சீமெந்து உற்பத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு திட்டம் தயாரித்துள்ளது.

இதுதொடர்பில் பணிகளை முன்னெடுக்கப்பட்ட ஐவர் குழுவின் பரிந்துரைக்கு அமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பாவனைக்கு உதவாத கட்டடங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள், வார்ப்புகள் மற்றும் இரும்புத் துண்டுகளை அரச பிரதம விலைமதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் அரச பெறுகை செயல்முறையின் கீழ் அகற்றுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

# 13ஆயிரம் பேரில் 5.5 வீதமானவர்களுக்கு தொற்று

இலங்கையில் நாளாந்தம் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்படும் 13000 பேரில் 5.5 வீதமானவர்கள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பி.சி.ஆர் சோதனைகளுடன் தொடர்புபட்ட சிரேஷ்ட மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாளாந்தம் 12000 முதல் 13000 பி.சி.ஆர் துரித அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுபவர்களில் 5.5 வீதமானவர்கள் நோயாளிகளாக அடையாளம் காணப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# விஷத்தை உண்ணும் இலங்கையர்கள்

உலகில் அதிகமாக விஷத்தினை உண்ணும் நாடு இலங்கை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெணிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "நாம் உண்ணும் உணவுகளின் தரவுகளுக்கு அமைய உலகில் அதிகப்படியான விஷத்தினை இலங்கையர்கள் உண்கின்றனர்.

இவ்விடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் உள்ளதால் நான் ஒரு கோரிக்கை விடுக்கிறேன்.

நாம் 2010ஆம் ஆண்டில் இருந்து இந்நாட்டில் விஷத்தினை சேர்க்க வேண்டாம் என கோருகிறோம். நாடாளுமன்றம் உங்களின் கைகளில் உள்ளது. விஷம் சேர்க்கப்படுவதை தடுத்து நிறுத்துங்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழி மூல உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரியர் நியமனம்?

தோட்ட பகுதிகளிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் வெற்றிடங்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட கவனம் செலுத்தினார்.



கேகாலையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

அனைத்து பாடசாலைகளின் கணினி தேவைகளையும் ஆராய்ந்து பூர்த்தி செய்யுமாறும் ஜனாதிபதி இதன்போது அறிவுறுத்தினார்.

மேலும் நாடு முழுவதும் கிராமப்புற தோட்டங்களை அண்மித்த சிறிய உள்நுழைவு வீதிகள் மற்றும் சிறிய வீதிகளை இணைக்கும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை கூறிய ஜனாதிபதி இனிமேல், அனைத்து நிர்மாணப் பணிகளும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் மேற்பார்வையில் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

கோகாலை மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ மற்றும் ஏனைய ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பவும் இப்பகுதியிலுள்ள காணிப் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மொட்டு அரசிலிருந்து...

வேண்டும்.”

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைத்துவம் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு விமல் வீரவன்சவுக்கு எவ்வித அருகதையும் கிடையாது. அவர் அவரின் கட்சி விவகாரத்தைப் பார்த்துக்கொள்ளட்டும். எமது பிரச்சினைகளை நாம் பார்க்கின்றோம்.

அரசில் இருந்தால் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். அதைவிடுத்து வீண் பிரசாரங்களைச் செய்வதை ஏற்க முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால் அரசில் இருந்து வெளியேறி, எதிரணியில் அமர்ந்து அவர் அதனை செய்யட்டும். விமல் வீரவன்ச என்ற நபரை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்” - என்றார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்சவை நீக்கிவிட்டு, அப்பதவி கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## எனது உயிருக்கு...

தனக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கப்பட்டதன் ஊடாக தனக்கு எதிரானவர்கள் செயற்படலாம் என்ற சமிக்ஞையை அரசாங்கம் வெளிப் படுத்தியுள்ளதா எனவும் கேள்வி அவர் எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்றைய தினம் உரையாற்றுகை யிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்,

10 முக்கியமான, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு எமக்கு உரிமையுள்ளது.

இந்தப் போராட்டம் மக்கள் ஆதரவுடன் வெற்றிபெற்றுள்ளது. இதற்கு அரசாங்கம் பதிலளிக்கும் என நம்புகின்றோம்.

இந்தப் போராட்டம் நிறைவுபெற்றதன் பின்னர் என்னுடைய பாதுகபாப்பிற்கு நியமிக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

எனினும் நான் எவருக்கு எதிராகவும் நான் எவ்வித முறைப்பாடுகளைச் செய்து விசேட பாதுகாப்பினை பெற்றுக் கொள்ளவில்லை.

என்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக அரசாங்கமே சில விடயங்களை செய்தது. பல வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு என்னுடைய ஆலோசனைகளோ, முறைப்பாடுகளோ இன்றி பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு ஏன் அகற்றப்பட்டது.

இதில் மூன்று விடயங்கள் காணப்படுகின்றன. ஒன்று அரசாங்கம் அவர்கள் என்னுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் எரிச்சலைடைந்துள்ளது.

இது உண்மையல்லவெனின் அப்பாவிகளை அரசாங்கம் தேவைற்ற வகையில் சிறையில் தடுத்து வைத்துள்ளது. அல்லாவிடின் அவர்களை செயற்படுமாறு அரசாங்கம் சமிக்ஞையை கொடுக்கிறது. ஆகவே எனக்கு ஏதாவது நடந்தால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

## நண்பன் வீட்டிற்கு...

குறித்த சிறுவன் நேற்றையதினம் மதியம் 2 மணியளவில் வீட்டில் இருந்து சக மாணவனின் வீட்டிற்குச் சென்று படித்து விட்டு வருவதாக சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரை காணவில்லை என ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் இன்று காலை முறைப்பாடு அழிக்கப்பட்டிருந்தது.

ஓமந்தை பொலிஸார் மோப்ப நாய் சகிதம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த சிறுவன் அவ் வீட்டில் காணப்பட்ட கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிசாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## ஐநூறுக்கு...

செய்யப்பட்டு வரும் நிலையில் சற்று முன்னதாக 571 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

## ஐ.நா. மனித...

இலங்கையின் வரையறைகளிற்குள் எதிர்வரும் 22ஆம் திகதி பொறுப்புக்கூறல் சார்ந்த யோசனைக்கான பதிலை அரசாங்கம் ஜெனீவாவில் அளிக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொறுப்புகூறல் சார்ந்த விவகாரம் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எதிர்வரும் 22ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்காக பதிலளிப்பதற்கும் இலங்கை அரச தரப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பிரிஸ், ஐ.நா மனித உரிமைகள் பேரவை மீது கடும் விமர்சனத்தை முன்வைத்தார்.

“ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் பேரவை குறித்தும் கருத்துகூற விரும்புகிறேன். பெப்ரவரி 22ஆம் திகதி இலங்கை சார்ந்த விடயங்கள் வருகின்றன. அப்போது வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிப்பார். நாங்கள் எமது அரசின் கருத்தை ஒரு கொள்கை வரையறைக்கு உட்பட்டே வழங்குகின்றோம். நாட்டின் உள்நாட்டு செயற்பாடுகளுக்கு ஐ.நா மனித உரிமை பேரவைக்கு எந்த உரிமையும் இல்லை. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், ஸ்ரீலங்கா குறித்து வெளியிட்ட அறிக்கையில் அதன் பலவீனத்தை கண்டோம். நாட்டின் அரசியலமைப்பு திருத்தம், இராணுவ அதிகாரிகளை உயர்ந்த பதவிகளுக்கு நியமிக்கின்றமை, தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு தலையீடு செய்ய ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கோ அல்லது அதன் ஆணையாளருக்கோ உரிமையில்லை.

இலங்கைக்கு மட்டும் வரையறைக்கு உட்பட்ட விடயமல்ல. இது மிகவும் பாரதூரமான முன்னுதாரண மாகும். உள்நாட்டு செயற்பாடுகளுக்கு தலையீடுகின்ற சம்பிரதாயமானது ஐ.நாவில் உறுதியானால் அது ஏனைய நாடுகளுக்கும் ஏற்படும். 30 வருட போருக்குப் பின் வடக்கில் அபிவிருத்தி, சமாதானம் என்பவற்றை நான் கடந்த சில நாட்களாக கண்டேன். மூன்று நாட்கள் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் நான் இருந்தேன். பெருந்தெருக்கல், பாடசாலை, ஜீவநோபாய வழிகள் குறித்து பாரிய விருத்திகள் அங்கு உள்ளன. ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பலவற்றை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தி சமூகமயப்படுத்தல், தனிப்பட்ட காணிகளில் இருந்து 80 வீதத்திற்கும் அதிகமான படையினர் விலகி அவை உரிமையாளர்களுக்கு வழங்கல், காணாமலாக்கப் பட்டோர் ஆணைக்குழு செயற்பாடு, தொழிற்சாலை, விவசாயம் விருத்தி குறித்து சாதாரண மதிப்பீடு காணப்பட வேண்டும்.

அதேபோல நாடுகள் குறித்து விசாரணை செய்கையில் ஒரே அளவுகோள் எடுத்துக்கொள்ளபடல் வேண்டும். போரில் இடம்பெற்றவை குறித்து ஆராயும் முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. ஆணைக்குழு கையாண்ட பல்வேறு சந்தர்ப்பங்களும் வித்தியாசப்படுகின்றன. சில நாடுகள் குறித்து கடும் விமர்சனம் முன்வைக்கப்படுகையில் ஏனைய நாடுகளுக்கு பாதுகாப்பளித்தல் என்பது ஐ.நாவின் அடிப்படை சிந்தனைகளுக்கு முரணாகும். இதில் ஸ்ரீலங்காவுக்கு அநீதியேற்பட்டதாகவே கருதுகிறோம். ஐ.நா அமைப்பின் அடிப்படை விடயங்களில் நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்துவம், உள்நாட்டு பொறிமுறைக்கு கௌரவம் அளிக்கப்படுவது அவசியம். இலங்கையில் உள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழு என அமைக்கப்பட்டு பெறுமதிமிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அரசதலைவர் கோட்டாபய ராஜபக்ச, உச்சநீதிமன்ற நீதியரசரான நவாஸ் அவர்களின் தலலைமையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

இதுவரை இடம்பெற்ற செயற்பாடுகளை ஆராய்ந்து, எஞ்சிய பணிகள் குறித்த பரிந்துரைகளை 6 மாதங்களிற்குள் அரசாங்கத்திற்கு அளிக்க வேண்டும். இதுகுறித்து பயனுள்ளதாக பார்க்க வேண்டும். மாறாக பிழையாக பார்த்து தீர்மானங்களை எடுப்பது பிழையான கொள்கையாக அமையும் எந்த விசாரணை ஏற்படினும் நாட்டின் அரசியலமைப்பிற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். மக்கள் ஆணையை பிரதிபலிக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். இவை குறித்து கவனம் செலுத்தாமல் நாட்டிற்கு நீதியை ஏற்படுத்த முடியாது என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த வரையறைக்கு மத்தியில்தான் இலங்கை அரசாங்கம் பதிலளிக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி சமூகத்துடன் சேர்த்தோம்.

அது ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்த மிகப்பெரிய பணியாகும். விடுதலைப் புலிகளுடன் இருந்த போராளி களையே மீண்டும் சமூகமயப்படுத்தினோம். அதேபோல கன்னிவெடிகளை அகற்றி, மக்களுக்கு தங்களது வீடுகளுக்கு செல்வதற்கான சுதந்திரத்தை ஏற்படுத்தினோம். யுத்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து இதுவரை எந்த வகையிலான மாற்றங்கள் ஏற்பட்டன என்பது குறித்து தெளிவுபெற்றுக் கொள்வது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொத்துவில்...

எனவும் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனது அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பேரணியில் முக்கியமான விடயம் வெளியிலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரை முன்னால் நிறுத்திவிட்டு பின்னாலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரில் பிழை இல்லை.

இதில், அரசியல்வாதிகள் வேண்டாம் என்பது போன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாம் திகதி பொத்துவிலில் பேரணி ஆரம்பமான போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்லாமல் விட்டிருந்தால் அந்தப் பேரணி பொத்துவிலோடு முடிந்திருக்கும்.

அங்கு போன நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறை சொல்வது சரியல்ல. அதிலே, மிக முக்கியமாக முன்னணியில் சுமந்திரனும் சாணக்கியனும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பைப் புறக்கணிக்க முடியாது.

அவர்களுக்குடன் ஆயிரம் கருத்து வேறுபாடு இருக்கலாம். விமர்சனங்கள் இருக்கலாம். எல்லோரும் சேர்ந்து இதைச் சாதித்தோம் என்பதைப் புரிந்துகொள்ளாமல் கருத்துத் தெரிவிப்பது சரியல்ல.

சில கருத்து வேறுபாடுகள் இருந்தால் அதைப் பேசலாம். தீர்த்துக் கொள்ளலாம். அதை விடுத்து திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்னால் வைத்து கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக நடந்து கொண்டார்கள் என அறிவிக்கின்றார்.

எங்கள் வீட்டுப் பிரச்சினையைக்கூட பொது வெளியில் பேசவேண்டிய அவசியமில்லை.

அதன் எதிரொலியாக திருகோணமலையிலிருந்து பேரணியில் சுமந்திரன் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு வேறு தனிப்பட்ட காரணங்களும் இருந்திருக்கலாம்.

முன்னுக்கு நாங்கள் தான் வர வேண்டும் என சாமியாரை வேள்விக்குக் கொண்டு செல்வதைப் போல வளையம் பிடித்துக்கொண்டு கொண்டு சென்றார்கள். இதெல்லாம் தேவையில்லை.

அவர்கள் தலைமை தாங்கி முன் செல்லலாம் என்று எங்களுக்கும் உடன்பாடு இருந்தது. முதலில் மதத்தலைவர்கள், பின்னால் பல்கலைக்கழக மாணவர்கள், அதன்பின்னால் சிவில் சமூகத்தினர், அதையடுத்து அரசியல்வாதிகள் எனக் கூறினார்கள். நான் ஒன்றைத் தெளிவாகக் கூறுகிறேன். அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது.

இது தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல. எல்லோரும் இணைந்த இனத்தின் வெற்றி. இதைப் புரிந்து கொள்ளாமல் அவர் வேண்டாம், இவர் வேண்டாம் எனச் சொல்ல முடியாது. தனிப்பட்ட கட்சிப் பிரச்சினைகளை வேறு இடங்களில் வைத்துக் கொள்ளுங்கள்

இதேவேளை, சிலர் நினைக்கிறார்கள் கல் வைத்த இடம் ஊறணியென, வல்வெட்டித்துறையென. அது தவறானது.

அதுவும் பொலிகண்டிதான். பொலிகண்டி செம்மீன் படிப்பகத்தில்தான் கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டுவதெல்லாம் திட்டத்தில் இருக்கவில்லை. திடீரென செய்யப்பட்ட ஏற்பாடு. ஆனால், சுமந்திரனும், சாணக்கியனும் அதில் போராட்டத்தை முடித்து வைப்பதை போல நடந்து கொண்ட விதம் பிழையானது. பொலிகண்டி ஆலடியில் மக்கள் வற்புறுத்தியிருக்கலாம்.

ஆனால், தலைவர்கள் தலைமை தாங்கிச் சரியான வழிகாட்ட வேண்டும். ஆனால், அப்பொழுது தலைமைத் துவம் இல்லாமல் போய்விட்டது.

நான் திக்கம் சந்திக்குப் போய்க்கொண்டிருந்த போது, சுமந்திரனும் சாணக்கியனும் நிகழ்ச்சியை முடித்துவிட்டனர் எனச் செய்தி வந்தது. பின்னர் சாமியார் அங்கு வந்து பிரகடனம் வாசித்து முடித்து வைக்கப்பட்டது. என்று குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு, கிழக்கு...

தேவை என்கிறது.

மாகாண சபை முறையை நான் எதிர்க்கிறேன் என்பதை நான் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறேன். அதன் மூலம் நாட்டின் ஒற்றையாட்சிக்கு பலமான அடி விழுவதுடன் எமது நாட்டையும் ஒரு சமஷ்டி நாடாக மாற்றியமைக்க வேண்டியேற்படும்.

நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு கடந்த 2500 வருடங்களாக எம்மில் பல லட்சம் பேர் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளார்கள்.

அதன்படி இது ஒரே நாடு இதில் ஒரே சட்டம் என்ற நிலை காணப்படுமாயின் ஒன்பது மாகாணங்களில் ஒன்பது வகையான சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது.

ஒற்றையாட்சியை விரும்பும் ஒரு அரசு என்ற வகையில் அது பற்றி சிந்திப்பது பிழையல்ல.

புதிய அரசயலமைப்பொன்றை நாம் தயாரிக்கப் போகிறோம். அதன்படி குறைந்த அதிகாரங்களுடனான மாகாண சபைகள் இயங்குவதை நாட்டின் பொதுமக்களும் விரும்புவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 40 நாள்...

தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

தொடரான அன்டிஜன் பரிசோதனைகளை அடுத்து குறித்த பிரதேசத்தின் 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஏற்கனவே தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டது.

தொடர்ந்தும் கடந்த 40 நாட்களாக 10 கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுலில் இருந்த நிலையிலேயே இன்று அவை விடுவிக்கப்பட்டன.

## இலங்கை வரும்...

கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயத்தை உறுதிப்படுத்திக் கூறினார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், எதிர்வரும் 22ஆம் திகதி இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரையும் சந்தித்து, இரு தரப்புப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்த கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள், நாட்டுக்கு வருகைதரும் முதலாவது வெளிநாட்டு அரச தலைவராக இம்ரான் கான் வரலாற்றில் இடம்பிடிக்கின்றார்

# காதலர் தினத்தில் ஒன்று கூடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

சுகாதார ஆலோசனைகளை மீறி காதலர் தின களியாட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான களியாட்ட நிகழ்வுகளை முன்னெடுப்பவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக



பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களில் விருந்துபசார மற்றும் திருமண நிகழ்வுகளிலேயே அதிக கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்ட அவர், சமூக வலைத்தளங்களின் ஊடகவே பல்வேறு களியாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இதனால், காதலர் தினம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் அனுமதியின்றி களியாட்டங்கள் மற்றும் விருந்துபசாரங்களை முன்னெடுப்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# 09 மில்லியன் மக்களுக்கு செலுத்தும் வகையில் 18 மில்லியன் டோஸ் தடுப்பூசி

09 மில்லியன் மக்களுக்கு செலுத்தும் வகையில் 18 மில்லியன் டோஸ் கொரோனா தடுப்பூசி அரசாங்கத்தால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவக்ஸ் திட்டத்தின் மூலம் முதல் தொகுதி தடுப்பூசிகள் பெப்ரவரி இறுதிக்குள் இலங்கையை வந்தடையும் என பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் 4,000 மத்திய நிலையங்களில் தடுப்பூசியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொரோனா ஒழிப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், 30 தொடக்கம் 60 வயதுக்கிடைப்பட்ட தொழில் செய்யும் அனைத்து பிரஜைகளுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அந்தவகையில் நாடு முழுவதும் அமைக்கப்படும் ஒவ்வொரு தடுப்பூசி மத்திய நிலையம் ஊடக தினமும் 300 பேருக்கு தடுப்பூசி போடப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மரணம் 365ஆக உயர்வு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் 9 மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு 15 பகுதியைச்



சேர்ந்த 95 வயதான ஆண்ணொருவரும் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 61 வயதான பெண்ணொருவரும் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண்ணொருவரும் இவ்வாறு கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு, நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 70 வயதான ஆண்ணொருவருவரும் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 45 வயதான பெண்ணொருவரும் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண்ணொருவருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஹொரணை பகுதியைச் சேர்ந்த 61 வயதான ஆண்ணொருவரும் குருதெனிய பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஆண்ணொருவரும் மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஆண்ணொருவருவரும் இவ்வாறு கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 365ஆக அதிகரித்துள்ளது.

# உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து இம்மாத நடுப்பகுதியில் தடுப்பூசிகள் கிடைக்கும்

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் முதற்கட்டமாக இம்மாதத்தின் நடுப்பகுதியில் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமானோருக்கு இந்த தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என பிரதி பொது மக்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) இணைய வழியூடாக நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், “உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கை



யின் சனத்தொகையில் 20 சதவீதமானோருக்கு வழங்கப்படவுள்ளதாக கூறப்பட்ட தடுப்பூசிகள் முதற்கட்டமாக இம்மாதத்தின் நடுப்பகுதியில்கிடைக்கப் பெறும்.

அடுத்த கட்டம் எதிர்வரும் காலங்களில் கிடைக்கும். அத்தோடு அரசாங்கத்தினால் 18 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை கிடைப்பதற்கு கால தாமதம் ஏற்படும்.

நாட்டில் தகுதியான 4000 தடுப்பூசி நிலையங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஒரே சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளை வழங்குவதற்காக 2000 நிலையங்களை தயார்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதற்கமைய ஒரு நிலையத்தில் 300 என்ற வீதத்தில் நாளொன்றுக்கு 60 இலட்சம் பேருக்கு தடுப்பூசிகளை வழங்கக்கூடியதாகவிருக்கும்.

இந்தியாவிலிருந்து கிடைத்துள்ள தடுப்பூசிகள் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் அளவு குறைவடைந்துள்ளது.

இதற்கான காரணம் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களுக்கு தடுப்பூசி வழங்கல் நிறைவடைந்துள்ளது. தற்போது அடுத்த கட்டத்தினருக்கு வழங்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தொற்று 70ஆயிரத்தை கடந்தது!

இலங்கையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 887 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பேலியகொடை கொவிட் கொத்தணியுடன் தொடர்புடைய 859 பேருக்கும் சிறைச்சாலை கொத்தணியுடன் தொடர்புடைய 19 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியானதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி மினுவாங்கொடை, பேலியகொடை மற்றும் சிறைச்சாலை கொத்தணிகளில் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆயிரத்து 225 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 64 ஆயிரத்து 141 பேர் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 5 ஆயிரத்து 729 நோயாளர்கள் சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், கொரோனா பரவல் தொடர்பான சர்வதேச நாடுகளின் பட்டியலில் இலங்கை 90ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2021ஆம் ஜனவரி மாதத்தில் மட்டும் 213,000 பேர் வேலை இழப்பு



கனடாவில் 2021ஆம் ஜனவரி மாதத்தில் மட்டும் 213,000பேர் வேலை இழந்துள்ளதாக கனடாவின் புள்ளிவிபரங்கள் திணைக்கள அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த எண்ணிக்கை இழப்புகள் மற்றும் ஆதாயங்கள் இரண்டிற்கும் காரணமாகிறது. சில மாகாணங்களில் அதிகரிப்புடன் கூட வேலைவாய்ப்பு எண்ணிக்கையின் வீழ்ச்சியைக் காணலாம்.

இந்த அறிக்கையின்படி, வேலை இழந்தவர்கள் பெரும்பாலும் சில்லறை துறையில் பகுதிநேர ஊழியர்களாக இருந்தனர்.

உணவு சேவைகள் மற்றும் தகவல், கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிற தொழில்கள் ஆகும்.

புதிய மற்றும் தொடர்ச்சியான பொது சுகாதார கட்டுப்பாடுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட தொழில்கள் இவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அல்பர்ட்டா, மனிடோபா, நோவா க்ஷ்கோட்டியா மற்றும் பிரின்ஸ் எட்வர்ட் தீவுகள் உள்ளிட்ட பிற மாகாணங்களில் வேலைவாய்ப்பு உயர்ந்தது.